24.10.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### 2-ஆவது நாளாக மழை: நேரடி நெல் விதைப்பு பணி தீவிரம்



வேதாரண்யம் பகுதியில் 2-ஆவது நாளாக வெள்ளிக்கிழமையும் மழை பெய்ததைத் தொடர்ந்து, மானாவாரி வயல்களில் நேரடி நெல் விதைப்பு பணிகள் தீவிரமடைந்துள்ளன.

வேதாரண்யம் அருகே உள்ள கோடியக்கரை, தகட்டூர், மருதூர், ஆயக்காரன்புலம் உள்ளிட்ட கிராமங்களின் சுற்றுப் பகுதியில் வியாழக்கிழமை மழை பெய்தது. இந்த நிலையில், வெள்ளிக்கிழமை அதிகாலை மற்றும் பகல் நேரங்களில் வேதாரண்யம், தலைஞாயிறு பகுதியில் பரவலாக மழை பெய்தது. இதில்,

கருப்பம்புலம், வாய்மேடு, தகட்டூர், ஆயக்காரன்புலம்,கரியாப்பட்டினம் பகுதியில் சற்று கனமாகவும், தலைஞாயிறு மற்றும் வேதாரண்யம் நகரப் பகுதியில் லேசாகவும் மழைப் பெய்தது.

இதைத்தொடர்ந்து, மானாவாரி நிலங்களில் நேரடி நெல் விதைப்பு பணியில் விவசாயிகள் தீவிரம் காட்டி வருகின்றனர்.

## ஹிமாசலில் ஆப்பிள் உற்பத்தி சரியும்



ஹிமாசல் மாநிலத்தில் ஆப்பிள் உற்பத்தி நடப்பு ஆண்டில் 2 கோடி பெட்டிகளாக குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதுகுறித்து அந்த மாநில தோட்டக்கலை துறையின் செய்தித் தொடர்பாளர் கூறியதாவது:

பனிப்பொழிவு போதுமான அளவில் இல்லாதது மற்றும் குளிர்ச்சியான நாள்கள் குறைந்தது உள்ளிட்ட காரணங்களால் கடந்த ஆண்டில் 2.90 கோடி பெட்டிகளாக இருந்த ஆப்பிள் உற்பத்தி நடப்பு ஆண்டில் 2 கோடி பெட்டிகளாக குறையும் என்று

மதிப்பிடப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டில் இதுவரையில் 1.95 கோடி பெட்டி ஆப்பிள்கள் நாட்டின் பல்வேறு சந்தைகளுக்கு 43,327 லாரிகள் மூலம் கொண்டு செல்லப்பட்டன. மேலும், மாநில அரசின் கொள்முதல் கிட்டக்கின் கீம் 15,255 டன் ஆப்பிள்கள் 277 சேகரிப்பு மையங்களில் கொள்முதல் செய்யப்பட்டன.

கடந்த 2011-ஆம் ஆண்டில் மிக குறைந்தபட்சமாக 1.37 கோடி பெட்டி ஆப்பிள்கள் உற்பத்தி செய்யப்பட்டன.

அதேசமயம், கடந்த 2010-ஆம் ஆண்டில்தான் ஆப்பிள் உற்பத்தி அதிகபட்சமாக 3.88 கோடி பெட்டிகளாகவும், ஏற்றுமதி 4.46 கோடி பெட்டிகளாகவும் இருந்தன என்றார் அவர்.

ஒரு பெட்டி என்பது 20 கிலோ எடையளவு ஆப்பிள்கள் கொண்டது. அதில், சுமார் 100 ஆப்பிள்கள் இருக்கும்.

**தினமலர்**

**இன்றைய வேளாண் செய்திகள்**

## கொப்பரை ஏலத்துக்கு வரும் 28ல் விடுமுறை

ஈரோடு: அவல்பூந்துறை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில், வாரம்தோறும் வெள்ளிக்கிழமை, தேங்காய் கொப்பரை ஏலம் நடப்பது வழக்கம். ஈரோடு, நாமக்கல், திருப்பூர், சேலம், கரூர் உட்பட பல மாவட்ட விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் இதில் பங்கேற்பார்கள். தீபாவளியை முன்னிட்டு, வரும், 28ல் நடக்கவுள்ள கொப்பரை ஏலத்துக்கு விடுமுறை விடுக்கப்படுகிறது. நவ.,4ல் வழக்கம்போல் நடக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## வடகிழக்கு பருவ மழையை எதிர்நோக்கி 'தவம்' சவாலே சமாளி! தெளிப்பு நீர் பாசனத்தில் விவசாயிகள் ஆர்வம்

ஊட்டி : நீலகிரியில், மழை பொழிவு காலம் தாழ்த்தி வரும் நிலையில், விவசாயிகள், நுண்ணீர், தெளிப்பு நீர் பாசனத்தில் ஆர்வம் காட்டத் துவங்கியுள்ளனர்.

நீலகிரியில், காலம் மற்றும் பருவம் மாறாமல், பெய்து வந்த மழையால், விவசாயம் செழித்தது; விவசாய நிலங்களில் இருந்த கிணறுகளில், ஆண்டு முழுவதும் நீர் இருந்தது. தற்போது, பெரும்பாலான விவசாய நிலங்களில், ஆழ்துளை கிணறுகள் அமைத்து, அந்நீர், விவசாயத்துக்கு பயன்படுத்தப்பட்டு வந்தது.

உலகளவில் நிகழும் காலநிலை மாற்றம், நீலகிரி மாவட்டத்தையும், விவசாயிகளையும் அதிகமாகவே 'பதம்' பார்க்க துவங்கியிருக்கிறது. சமீப காலமாக, காலம் தவறி மழை பெய்கிறது; சில சமயங்களில், மழை பொய்த்து போகிறது அல்லது, ஒரே சமயத்தில் மழை கொட்டித் தீர்க்கிறது.

இத்தகைய மாற்றங்களால், திட்டமிட்டு விவசாயம் செய்ய முடியாமல் விவசாயிகள் திணறி வருகின்றனர். விவசாய நிலங்களில் உள்ள கிணறுகளில், நீர் சுரப்பது குறைந்திருக்கிறது; பல இடங்களில், ஆழ்துளை கிணறுகளில் நீர் வரத்து குறைந்துள்ளது.

மாற்று ஏற்பாடு

விவசாய நிலங்களில் நீரை சேமிக்க வேண்டிய கட்டாயத்துக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர்; நுண்ணீர், தெளிப்பு நீர் பாசன திட்டத்தை, விவசாயிகள் மேற்கொள்ள துவங்கியுள்ளனர். இத்தொழில்நுட்பத்தில், குழாய் பதித்து, கிணற்று நீரை 'பம்ப்' செய்வதால், நீர் விரயம் தவிர்க்கப்பட்டு, சிக்கனமாக பயன்படுத்தப்படுகிறது.

ஈடு செய்வதில் சிரமம்

ஊட்டி விவசாயி மூர்த்தி கூறுகையில், “மழை பொய்த்ததால், விவசாய நிலங்கள் வறண்டுள்ளன. கிணற்று நீரை, தாராளமாக பாய்ச்ச முடியவில்லை. எனவே, நுண்ணீர் பாசன திட்டத்துக்கு விவசாயிகள் மாறி வருகின்றனர். இது, பயன் தரக்கூடியது என்றாலும், பம்ப் இயக்க டீசல் செலவு அதிகரிக்கிறது. விளைப்

பொருட்களுக்கு சந்தையில் நல்ல விலை கிடைத்தால், செலவை ஈடு கட்ட முடியும். ஆனால், சந்தையில் விலை இல்லாததால், செலவை ஈடு செய்வதில் சிரமம் உள்ளது," என்றார்.

மானிய பயன்

நீலகிரி மாவட்ட தோட்டக்கலை துறை இணை இயக்குனர் மணி கூறுகையில், "மாவட்டத்தில், 5,000 ஏக்கரில், தெளிப்பு நீர் பாசனம் மேற்கொள்ள, தோட்டக்கலைத் துறை சார்பில், 100 சதவீத மானியம் வழங்கப்படுகிறது; இதுநாள் வரை காய்கறி விவசாயிகளுக்கு மட்டுமே இத்தகைய மானியம் வழங்கப்பட்டு வந்த நிலையில், முதன் முறையாக, காபி, தேயிலை விவசாயிகளுக்கும் வழங்கப்படுகிறது; 250 விவசாயிகள் மானியம் பெற்று, தெளிப்பு நீர் பாசனத்தை ஏற்படுத்தியுள்ளனர்," என்றனர்.

தென்மேற்கு பருவ மழை போன்று, வட கிழக்குப் பருவ மழையும் ஏமாற்றும் பட்சத்தில், நீலகிரி மாவட்டத்தில் விவசாயத்தை தொடர்வது, பெரும் சவாலாக இருக்கும் என்பதே, விவசாயிகளின் அச்சம்.

## மலைப்பகுதியில் மணம் வீசும் சோம்பு

தாண்டிக்குடி: தாண்டிக்குடி மலைப்பகுதியில் சோதனை அடிப்படையில் வாழைகிரியில் 'சோம்பு' செடி வளர்க்கப்பட்டு நன்கு காய்த்துள்ளது.

பண்ணைக்காடு வாழைகிரி பகுதியை சேர்ந்த மல்லிகா, தனது வீட்டு வாசலில் சோதனை அடிப்படையில் சில சோம்பு செடியை வளர்த்தார். நாளடைவில் செழித்து வளர்வது கண்டு இயற்கை முறையில் பராமரிப்பு செய்தார்.

தற்போது பூப் பூத்து சோம்பு நன்கு வளர்ந்து அறுவடை நிலையை எட்டியுள்ளது. இங்கு வளர்ந்து காய்த்துள்ள சோம்பு செடியை அனைவரும் ஆச்சர்யத்துடன் பார்த்து செல்கின்றனர். சித்த மருத்துவம், சமையலில் முக்கிய பங்கு வகிக்கும் சோம்பு இங்கு நிலவும் சீதோஷ்ண நிலைக்கு ஏற்ப செழித்து வளர்ந்துள்ளதால் விவசாயிகள் கூடுதல் பரப்பில் பயிரிட வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

## சாகுபடி பயிற்சி முகாம்

திண்டிவனம்: திண்டிவனம் வேளாண் அறிவியல் நிலையத்தில், சிறுதானியங்களின் சாகுபடி குறித்து பயிற்சி முகாம் நடந்தது.

பயிற்சி முகாமை, அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் ஷீபா தலைமை தாங்கி, துவக்கி வைத்தார். சிறுதானிய பயிர்களான கம்பு, சோளம், கேழ்வரகு, வரகு, பனிவரகு, சாமை, தினை மற்றும் குதிரை வாலி ஆகியவற்றின் சாகுபடிகள் குறித்தும், மதிப்பு கூட்டுதல் குறித்தும் உதவி பேராசிரியர் சங்கீதா, விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தார்.

திண்டிவனம் மற்றும் அதைச் சுற்றியுள்ள விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

## சித்தாத்தூரில் கால்நடை பாதுகாப்பு முகாம்

கண்டாச்சிபுரம்: கண்டாச்சிபுரம் கோயில் நகரம் லயன்ஸ் கிளப் சார்பில், கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம் நடந்தது.

சித்தாத்தூரில் நடந்த முகாமை, ஊராட்சித் தலைவர் தண்டபாணி துவக்கி வைத்தார். லயன்ஸ் கிளப் தலைவர் டாக்டர் மூர்த்தி, செயலாளர் குணசேகரன், பொருளாளர் பிரகாஷ் முன்னிலை வகித்தனர்.

கண்டாச்சிபுரம் கால்நடை மருத்துவமனை டாக்டர் அருண் தலைமையிலான குழுவினர், 400 கால்நடைகளுக்கு கோமாரி தடுப்பூசி போட்டனர்.

மேலும் 400 ஆடுகள், 80 கன்றுகளுக்கு சிகிச்சை அளித்தனர். சிறப்பாக பராமரிக்கப்பட்ட இளங்கன்றுகளுக்கு பரிசு வழங்கப்பட்டன. இதில் கால் நடை ஆய்வாளர் வஜ்ரவேல், உதவியாளர்கள் நதியா, சரஸ்வதி மற்றும் லயன்ஸ் கிளப் உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

## புதிய பயிர் காப்பீடு திட்டம் வானூரில் விளக்கக் கூட்டம்

வானூர்: வானூர் வேளாண்மை துறை சார்பில் புதிய பயிர் காப்பீடு திட்டம் குறித்த விளக்க கூட்டம், திருச்சிற்றம்பலத்தில் நடந்தது.

பிரதம மந்திரியின் புதிய பயிர் காப்பீடு திட்டம் குறித்த விளக்க கூட்டம், திருச்சிற்றம்பலம் பி.டி.ஓ., அலுவலகத்தில் நடந்தது. கூட்டத்திற்கு வானூர் வேளாண்மை உதவி இயக்குனர் வேலு தலைமை தாங்கினார். தோட்டக்கலை உதவி இயக்குனர் அன்பழகன் முன்னிலை வகித்தார்.

இதில், வேளாண்மை உதவி இயக்குனர் வேலு பேசுகையில், புதிய பயிர் காப்பீடு திட்டத்தில், காப்பீடு செய்யக்கூடிய பயிர்கள், காப்பீட்டிற்கான பிரிமிய தொகை, பயிர் சாகுபடியில் ஏற்படக்கூடிய பாதிப்பு அளவு, தன்மை மற்றும் இழப்பீடு வழங்குவது குறித்தும் விளக்கி கூறினார்.

காப்பீடு செய்ய நியூ இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனம் தேர்வு செய்யப்பட்டு, பயிர் காப்பீடு செய்ய நிறுவனத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது மற்றும் கூட்டுறவு வங்கியில் கடன் பெறும் விவசாயிகள் மற்றும் கடன் பெறா விவசாயிகளுக்கும் பயிர் காப்பீடு செய்ய வங்கி செயலாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

கூட்டத்தில், வானூர் ஒன்றிய பகுதியிலுள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி செயலாளர்கள், வேளாண்மை அலுவலர் சுரேஷ், வேளாண்மை உதவி அலுவலர்கள் ராஜ்குமார், தங்கம், கலைச்செல்வி, ரேகா, புஷ்பா, ராஜேஸ்வரி, வட்டார ஆத்மா திட்ட தொழில்நுட்ப மேலாளர் நரசிமராஜ், உதவி மேலாளர் வீரமணி உள்பட பலர் கலந்துக் கொண்டனர்.

## மலை வேப்பமரம் சாகுபடி: காகித ஆலை மூலம் ஏற்பாடு

கரூர்: கரூர் அரசு காலனி அருகே, ஓர் ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்டுள்ள மலை வேப்பமரத்துக்கு, போர்வெல் மூலம் தண்ணீர் பாய்ச்சப்படுகிறது.

இதுகுறித்து, அரசு காலனியைச் சேர்ந்த முத்துச்சாமி கூறியதாவது: கரூர், அரசு காலனி அருகே, ஓர் ஏக்கர் பரப்பளவில் மலை வேப்பமரம் பயிரிட்டுள்ளோம். இதற்கு வாரந்தோறும் போர்வெல் மூலம் கிடைக்கும் நீரில் இருந்து இரண்டு முறை தண்ணீர் விடுகிறோம். தற்போது, தண்ணீர் பற்றாக்குறையால், மலை வேப்பமரம் பயிரிடப்பட்டு பராமரித்து வருகிறோம். ஈரோடு சேசாய் பேப்பர் மில்லில் இருந்து

மரக்கன்றுகள் கொடுக்கின்றனர். இதை, நட்டு பராமரித்து வளர்ப்பது தான் எங்கள் வேலை. ஐந்தாண்டு வளர்ந்த பின், சேசாய் பேப்பர் மில்லில் இருந்தே வந்து மரங்களை வெட்டி லாரியில் எடுத்துச் சென்று விடுகின்றனர். ஒரு டன் மரம், 20 ஆயிரம் ரூபாய் வரைக்கும் விலை போகும். இதன், நடுவே ஊடுபயிர் செய்ய முடியாது. இதற்கு உரமாக ஆடு, மாட்டு சாணங்கள், கோழிக்கழிவுகள் பயன்படுத்தி வருகிறோம். அவை மக்கி இயற்கை உரமாக மரங்களுக்கு பயன்பட்டு வருகிறது. இதை பராமரிக்க அதிகளவில் பணியாளர்கள் தேவையில்லை. இவ்வாறு அவர் கூறினார்.

## வளர்ச்சி பெறும் ஆந்திரா பொன்னி ரகம்: மாயனூர் காவிரிபடுகையில் உரம் தெளிப்பு

கிருஷ்ணராயபுரம்: மாயனூர் பகுதியில் சாகுபடி செய்யபட்ட நெற் பயிறுக்கு, உரம் தெளிப்பு பணிகளில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் தாலுகா, மாயனூர் காவிரி படுகையொட்டி உள்ள விவசாய நிலங்களில், கடந்த சில நாட்களுக்கு முன் நெற்பயிர் நடவு செய்யும் பணிகள் நடந்தன. இப்பணிகள் முடிவடைந்த நிலையில், தற்போது நெற்பயிர் நல்ல முறையில் வளர்ச்சி அடைந்தால், அவை மேலும் நல்ல வளர்ச்சி அடைய, யூரியா உரம் தெளிக்கும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

இதுகுறித்து விவசாயிகள் கூறியதாவது: காவிரி கரையோர பகுதியில், ஆந்திரா பொன்னி வகை நெல் ரகம் நடவு செய்யப்பட்டுள்ளது. பயிர்கள் நன்கு முளைத்து வளர்ந்து வருவதால், மேலும் வளர்ச்சி அடைய யூரியா உரம் தெளிக்கப்படுகிறது. இந்த சூழலில், பருவமழை பெய்தால், இந்த உரம் நிலத்தில் நன்றாக கரைந்து பயிர் செழிப்பாக வளர்வதற்கு வழிவகை செய்யும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

## பதிவு செய்த கரும்பு 11 மாதம் கடந்தால் விவசாயிகள் அறுவடை செய்ய அனுமதி கலெக்டர் அறிவிப்பு

தேனி: சர்க்கரை ஆலைக்கு பதிவு செய்த கருப்புகளை 11 மாதத்திற்குள் ஆலை நிர்வாகம் வெட்ட வேண்டும். தாமதம் செய்தால் விவசாயிகள் வெட்டுவதை தடுக்க கூடாது என கலெக்டர் வெங்கடாசலம் தெரிவித்தார்.

தேனி மாவட்டத்தில் 1,500 ஏக்கரில் கரும்பு சாகுபடி செய்கின்றனர். கரும்பு விவசாயிகள் ராஜ்ஸ்ரீ சர்க்கரை ஆலையில் பதிவு செய்து கடன் பெறுகின்றனர். சர்க்கரை ஆலை, விவசாயிகளுக்கு மத்திய, மாநில அரசு கரும்பிற்கு நிர்ணயித்த ஆதார விலையினை மூன்று ஆண்டுகளாக வழங்க வில்லை. விவசாயிகளுக்கு 45 கோடிரூபாய் வழங்காமல் காலம் தாழ்த்தி வருகின்றனர்.

ஆனால் இதே நிர்வாகத்தின் கீழ் இயங்கும் விழுப்புரம் மாவட்டம், முந்தியபாக்கம் சர்க்கரை ஆலையில் விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய ஆதார விலை நிலுவை தொகையினை 45 கோடி ரூபாய் பட்டுவாடா செய்துள்ளனர். ஆனால் தேனி மாவட்ட விவசாயிகளுக்கு இத் தொகை வழங்க வில்லை.

அனுமதி வழங்குவதில் தாமதம்:

சர்க்கரை ஆலையில் கரும்பு பதிவு செய்து பல மாதங்களாக விவசாயிகள் காத்திருக்கின்றனர். ஆனால் ஆலை நிர்வாகம் கரும்பினை வெட்டுவதற்கு உத்தரவு வழங்காமல் தாமதம் செய்கின்றனர். ஆலை மீண்டும் ஜனவரியில் இயங்கும் வரை விவசாயிகள் காத்திருந்தால் பெரும் நஷ்டம் அடைவார்கள்.

11 மாதத்தில் வெட்ட வேண்டிய கரும்பு 15 மாதங்களில் வெட்டுவதால் விவசாயிகளுக்கு பெரும் இழப்பு நேரிடும். விவசாயிகளை பாதுகாக்க கலெக்டர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாநில கரும்பு விவசாயிகள் சங்க செயலாளர் கண்ணன் குறை தீர்க்கும் கூட்டத்தில் கோரிக்கை வைத்து பேசினார்.

இப் பிரச்னை குறித்து கலெக்டர் வெங்கடாசலம் ஆலை நிர்வாகத்திடம் விளக்கம் கோரினார். ஆலை மூடியிருப்பதால் கரும்பு வெட்டவில்லை. சர்க்கரை விலை குறைவாக இருப்பதால் நிலுவைதொகை வழங்க வில்லை என காரணம் தெரிவித்தனர்.

இதனை ஏற்காத கலெக்டர் 'முந்தியப்பாக்கம் சர்க்கரை ஆலையில் நிலுவை தொகை வழங்கி இருந்தால் தேனி விவசாயிகளுக்கும் அரசு அறிவித்த ஆதார விலையினை வழங்க வேண்டும். அதோடு கரும்பு விவசாயிகள் எத்தனை மாதம் காத்திருப்பார்கள். 11 மாதத்திற்குள் ஆலை நிர்வாகம் கரும்பு வெட்டவில்லை என்றால் விவசாயிகளே கரும்பை வெட்டி கொள்வார்கள்.அதனை தடுக்க கூடாது.

விவசாயிகளை தொந்தரவு கொடுத்தால் போலீஸ் பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். கலெக்டரின் பதிலை விவசாயிகள் கைதட்டி வரவேற்றனர்

## ரூ.10 லட்சத்துக்கு மஞ்சள் வர்த்தகம்

ஆத்தூர்: புதுப்பேட்டை வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில், நேற்று நடந்த மஞ்சள் ஏலத்தில், 10 லட்சம் ரூபாய்க்கு வர்த்தகம் நடந்தது. ஆத்தூர், புதுப்பேட்டை வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நேற்று முன்தினம் நடந்த மஞ்சள் ஏலத்தில், ஆத்தூர், கெங்கவல்லி, தலைவாசல், கள்ளக்குறிச்சி பகுதிகளை சேர்ந்த, 55 விவசாயிகள், 250 மஞ்சள் மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர். அதில், விரலி மஞ்சள், குவிண்டால் அதிகபட்சம், 9,262 ரூபாய், குறைந்தபட்சம், 8,462 ரூபாய், உருண்டை மஞ்சள், குவிண்டால் அதிபட்சம், 8,316 ரூபாய், குறைந்தபட்சம், 7,682 ரூபாய் என, விற்றது. மொத்தம், 10 லட்சம் ரூபாய்க்கு, மஞ்சள் ஏலம்போனது.

## சிட்டு குருவி இனப்பெருக்கத்திற்கு மானாமதுரையில் தயாராகும் பானை

மானாமதுரை: மானாமதுரையில் சிட்டு குருவிகளின் இனப்பெருக்கம் செய்யும் வகையில் மண் பானைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

சிட்டுக்குருவிகள் அரிதாகி வருகின்றன. அவற்றை பாதுகாக்க சிலர் குருவி வாழும் இடங்களில் கூடு அமைத்து கொடுக்கின்றனர். இதற்காக அட்டை பெட்டிகள் (அ) மண் பானைகளை பயன்படுத்துகின்றனர். குருவி கூட்டிற்கான மண்பானைகள் அதிகளவில் மானாமதுரையில் தயாராகின்றன. குளிர்காலத்தில் சிட்டு குருவிகள் இனப்பெருக்கம் செய்தும். அதற்கேற்ப பிரத்யேக பானைகள் மானாமதுரையில் தயாரிக்கப்படுகின்றன.

இவை கூடுகளுக்கான பானையை விட பெரிதாக இருக்கும். உட்புறம் சிறிய பெட்டி போன்று உள்ளது. அற்றில் குருவிகள் இனப்பெருக்கம் செய்து முட்டையிட்டு குஞ்சு பொறிக்கும். குருவிகள் சென்று வரும் வகையில் சிறிய துளை உள்ளது.

அவற்றை தமிழகம் முழுவதும் உள்ள பறவை ஆர்வலர்கள் வாங்கி செல்கின்றனர்.

தயாரிப்பாளர் சோமசுந்தரம் கூறியதாவது: இனப்பெருக்கத்திற்காக தயாரிக்கப்படும் பானைகள் ஒன்றரை லி., கொள்ளவு கொண்டது. ஒரு பானை 100

ரூபாய் முதல் 150 ரூபாய் வரை விற்பனை செய்கிறோம். நாள் ஒன்றுக்கு 10 முதல் 15 பானைகள் வரை தயாரிக்கலாம். வாடிக்கையாளர்கள் விருப்பத்திற்கு ஏற்ப பானைகளில் இரு இடங்களில் துளையிட்டு தருகிறோம், என்றார்.

## வடகிழக்கு பருவ மழை அணையில் பராமரிப்பு பணி

மானாமதுரை: தமிழகத்தில் விரைவில் பருவமழை தொடங்கப்போவதை ஒட்டி அணைகளில் பராமரிப்பு பணிகளை பொதுப்பணித்துறையினர் தொடங்கியுள்ளனர்.

தமிழகத்தில் வடகிழக்கு பருவ மழை செப்டம்பரில் தொடங்கி ஜனவரி வரை நீடிக்கும்.இந்தாண்டு இதுவரை பருவ மழை தொடங்கவில்லை. மழை தொடங்குவதற்கான அறிகுறி தெரிவதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதனையொட்டி தமிழகம் முழுவதும் அணைகள்,கால்வாய்களை பொதுப்பணித்துறையினர் சரி செய்து வருகின்றனர்.

விவசாய தேவைக்காக கட்டப்பட்ட பார்த்திபனூர் மதகு அணையின் உட்புறமும் வெளிப்புறமும் கருவேல மரங்களும்,நாணல் புதர்களும் அதிகளவில் இருப்பதால் அணையில் இருந்து திறக்கப்பட்ட தண்ணீரை இவைகளே உறிஞ்சி விடுகின்றன.

இதனால் பாசனத்திற்கு போதுமான தண்ணீர் இன்றி விவசாயிகள் அவதிப்பட்டனர். இந்த அணையின் உட்புறமும்,வெளிப்புறமும் எட்டு லட்ச ரூபாய் செலவில் துார்வாரி முடிக்கப்பட்டுள்ளது. தற்போது அணையின் மேற்புறம் உள்ள ஷட்டர்கள்,செயின்கள் சுத்தம் செய்யப்பட்டு வருகிறது.

மேலும் ஷட்டர்களை ஏற்றி இறக்கி சரிபார்க்கப்பட்டு வருகிறது.கோட்ட பொறியாளர் நாகரத்னம்,உதவி பொறியாளர் கார்த்திக் தலைமையில் பராமரிப்பு பணிகள் நடந்து வருகின்றன.

இன்றைய வேளாண் செய்திகள்

## மேட்டூர் அணை நீர்மட்டம் 55 அடி



மேட்டூர்: கர்நாடக அணைகளான கபினி, கிருஷ்ணராஜசாகரில் இருந்து நீர்திறப்பு முற்றிலுமாக நிறுத்தப்பட்டுவிட்டது. இதன் காரணமாக மேட்டூர் அணைக்கு நேற்று 322 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. டெல்டா மாவட்ட பாசனத்திற்காக அணையிலிருந்து 12 ஆயிரம் கனஅடி நீர் திறந்துவிடப்படுகிறது. நேற்று அணையின் நீர்மட்டம் 55.93 அடியாகவும், நீர் இருப்பு 21.74 டிஎம்சியாகவும் உள்ளது. அடுத்த ஒரு வாரத்திற்குள் அணையின் நீர்மட்டம் 50 அடிக்கு கீழ் சரிந்து விடும்.

## மல்லசமுத்திரத்தில் சிறுதானியங்கள் மதிப்பு கூட்டு பயிற்சி முகாம்

திருச்செங்கோடு: திருச்செங்கோடு அருகேயுள்ள மல்லசமுத்திரம் வட்டார வேளாண்துறை சார்பில் சிறுதானியங்கள் மதிப்பு கூட்டு பயிற்சி முகாம் டந்தது. உதவி வேளாண் இயக்குநர் சண்முகம் தலைமை வகித்து, ராகி, வரகு, பனிவரகு, குதிரைவாலி, சாமை போன்ற சிறுதானிய பயிர்களின் மதிப்பு கூட்டுதலின் நோக்கம் குறித்து விளக்கி பேசினார்.

நாமக்கல் வேளாண் அறிவியல் நிலைய பேராசிரியர் அழகுதுரை, சிறுதானிய ரகங்கள், சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்து எடுத்துரைத்தார். சந்தியூர் வேளாண் அறிவியல் நிலைய பேராசிரியை கீதா, இயந்திரங்களை கொண்டு உமி நீக்குதல், சிறு தானியங்களை கொண்டு அவல், பொரி, சேமியா போன்றவை தயாரிப்பது பற்றி விளக்கினார்.

நிகழ்ச்சியில் மதிப்பு கூட்டப்பட்ட சிறுதானிய பொருட்கள் கண்காட்சி நடந்தது. வேளாண் அலுவலர் அருள்ராணி நன்றி கூறினார். இதில், சுமார் 50 விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர். இதற்கான ஏற்பாடுகளை வேளாண் அலுவலர் ராமசாமி, உதவி வேளாண் அலுவலர்கள் மோகன், முருகன், அலாவுதீன், சத்தியமூர்த்தி, பாரதி, செந்தில்குமார் ஆகியோர் செயதிருந்தனர்.

## கோழிகளில் தீவன எடுப்பு குறையும் : வானிலை மையம் தகவல்

நாமக்கல்: கோழிகளில் தீவன எடுப்பு குறையும் என வானிலை ஆலோசனை மையம் தெரிவித்துள்ளது. இது குறித்து, நாமக்கல் கால்நடை வானிலை ஆலோசனை மையம் வெளியிட்டுள்ள அறிக்கை: நாமக்கல் மற்றும் அதன் சுற்றுப்புற பகுதியில் வரும் 3 நாட்களும் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யும். தற்போது நிலவும் மேகமூட்டமான வானிலை நாளையுடன் முடிந்துவிடும்.

அடுத்த நாள் வெப்பநிலை அதிகரிக்கும். பருவமழை காலங்களுக்கு இடைப்பட்ட இக்காலகட்டத்தில் மாறுபடும் வானிலை காரணமாக, கோழிகளில் தீவன எடுப்பு

சற்று குறையும் வாய்ப்புள்ளது. ஆகவே அதற்கு தகந்தாற்போல, தீவனத்தில் ஊட்டசத்துக்களின் அளவை மாற்ற வேண்டும். கடந்த வாரம் பரிசோதனை செய்யப்பட்ட இறந்தகோழிகள் பெரும்பாலும் மேல்மூச்சுக்குழாய் மற்றும் ஈகோலை கிருமியின் தாக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ளது தெரியவந்துள்ளது.

எனவே பண்ணையாளர்கள் தகுந்த உயிர் பாதுகாப்பு முறைகளை கையாளுவதுடன், கோழிகளுக்கு அளிக்கப்படும் தீவனம் மற்றும் தண்ணீரில் ஈகோலை கிருமியின் தாக்கம் உள்ளதா? என பரிசோதனை செய்து அதற்கு தகுந்தாற்போல மேலாண்மை மற்றும் தடுப்பு முறைகளை கையாளவேண்டும். இவ்வாறு வானிலை ஆலோசனை மையம் தெரிவித்துள்ளது.

## விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் 27ம் தேதி நடக்கிறது

கிருஷ்ணகிரி : கிருஷ்ணகிரியில் வருகிற 27ம் தேதி விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடைபெறுகிறது. இது குறித்து மாவட்ட நிர்வாகம் வெளியிட்டுள்ள அறிக்கை: கிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில், வருகிற 27ம் தேதி காலை 11 மணிக்கு விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடைபெறுகிறது. இந்த கூட்டத்திற்கு மாவட்ட கலெக்டர் கதிரவன் தலைமை வகிக்கிறார். எனவே, கூட்டத்தில் விவசாயிகள் அனைவரும் பங்கேற்று தங்கள் குறைகளை தெரிவித்து நிவர்த்தி செய்துகொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாலக்காடு மாவட்டத்தில் நெல் அறுவடை சீசன் துவங்கியது தமிழக இயந்திரங்களுக்கு கிராக்கி

பாலக்காடு, : பாலக்காடு மாவட்டத்தில் நெல் அறுவடை சீசன் களை கட்டுகிறது. இதனால் தமிழக அறுவடை இயந்திரங்களுக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது. இதற்காக தமிழக பகுதியான திண்டுக்கல், பழநி, பொள்ளாச்சி மற்றும் ஒட்டன்சத்திரம் ஆகிய இடங்களிலிருந்து அறுவடை இயந்திரங்களை விவசாயிகள் வரவழைத்து அறுவடை செய்கின்றனர். ஒரு மணிநேரத்திற்கு ரூ. ஆயிரத்து 500 முதல் ஆயிரத்து 800 வரை வசூலிக்கின்றனர். தற்போது முதற்பட்டா அறுவடை நடைபெற்று வருகிறது. ஒரு மணிநேரத்தில் ஏக்கர் கணக்கான விளைச்சல் நிலங்களில் அறுவடை செய்யப்படுகிறது. முன்போன்று நாற்று நட்டவர்களே அறுவடை

செய்கின்ற சமபிரதாயம் மாறிவிட்டது. இயந்திரங்கள் மூலமாக அறுவடை செய்தால் வைக்கோல் மட்டும் சேதமாகிவிடுகிறது.நெல், பதறுகளின்றி சாக்குகளில் பிடிக்கப்பட்டு சேகரிக்கப்படுவதால் விவசாயிகள் எளிதாக உள்ளதாக தெரிவிக்கின்றனர். முன்பு போல் நாற்று நடுவதற்கும், அறுவடை செய்வதற்கும் ஆட்கள் கிடைப்பதில்லை என்பதால் விவசாயிகள் இயந்திரங்களை விரும்புகிறார்கள்.

**மயிலாடுதுறையில் 26ம் தேதி இலவச நாட்டுக்கோழி வளர்ப்பு பயிற்சி**

நாகை : நாகை கால்நடை மருத்துவமனை வளாகத்தில் செயல்பட்டு வரும், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தின் சார்பில் வருகிற 26ம் தேதி (புதன்) காலை 10 மணி அளவில், மயிலாடுதுறை கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குனர் அலுவலக பயிற்சி கூடத்தில், நாட்டுக்கோழி வளர்ப்பு என்ற தலைப்பில் இலவச பயிற்சி வகுப்பு நடைபெற உள்ளது.

இதில், நாட்டுக்கோழிகளின் இனங்கள், வளர்ப்பு முறைகள், கொட்டகை அமைப்பு, தீவன மேலாண்மை, குஞ்சுகள் மற்றும் நோய் பராமரிப்பு போன்ற தலைப்புகளில் பயிற்சி அளிக்கப்படும். பயிற்சியில் கலந்து கொண்டு பயன்பெற விரும்புவோர் நேரிலோ அல்லது 04365 247123 என்ற தொலைபேசி எண்ணை தொடர்பு கொண்டோ தங்கள் வருகையை பதிவு செய்து கொள்ள வேண்டும். இத்தகவலை நாகை கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய தலைவர் சீனிவாசன் தெரிவித்துள்ளார்.

**விவசாயிகளுக்கு விதை கிராம திட்ட பயிற்சி**

சீர்காழி : சீர்காழி அருகே செம்பதனிருப்பு கிராமத்தில் அட்மா திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு விதை கிராம திட்ட பயிற்சி நடைபெற்றது. உதவி விதை அலுவலர் உமா பசுமதி தலைமை வகித்தார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் பார்கவி வரவேற்றார். துணை வேளாண்மை அலுவலர் பன்னீர்செல்வம் முன்னிலை வகித்தார்.

முகாமில் வயல் ஆய்வு, கலவன் நீக்குதல், சான்றட்டை பொருத்துதல், விதை மாதிரி எடுத்தல், அறுவடைக்கு பின் ஈரப்பதம் பார்த்தல், கல் நீக்குதல், காயவைத்தல், பயிர் காப்பீட்டுத் திட்டம் குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது.

இதில் 40க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர். ஏற்பாடுகளை அட்மா திட்ட உதவி தொழில்நுட்ப மேலாளர் ராஜசேகரன் செய்திருந்தார். முடிவில் வேளாண்மை அலுவலர் விஜய் நன்றி கூறினார்.

### குமரி முழுவதும் விடிய விடிய மிதமான மழை விவசாயிகளுக்கு ஆறுதல்

நாகர்கோவில் : குமரி மாவட்டத்தில் தென் மேற்கு பருவமழை பொய்த்து போனதன் காரணமாக தற்போது அணைகளில் நீர் மட்டம் வெகுவாக குறைந்து வருகிறது. வெயில் வாட்டி வதைத்து வந்ததால் கால்வாய்கள், குளங்கள் வறண்டன. கும்பப் பூ சாகுபடி பணிகளை தொடங்க முடியுமா? என்ற நிலை உருவாகி உள்ளது. வடகிழக்கு பருவமழை அக்ேடாபர் 2வது வாரத்திலேயே தொடங்கும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது. ஆனாலும் வெயில் கொடுமை அதிகமாக இருந்தது.

இந்த நிலையில் கடந்த இரு தினங்களாக குமரி மாவட்டத்தில் லேசாக மழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம் காலையில் பல்வேறு இடங்களில் சாரல் இருந்தது. இரவு முதல் நாகர்கோவில் உள்பட மாவட்டம் முழுவதும் பல்வேறு இடங்களில் விடிய விடிய மழை பெய்தது. இந்த மழை நேற்று காலை வரை நீடித்தது. இந்த மழை காரணமாக ஆறுகளுக்கு தண்ணீர் வரத்து சற்று அதிகரித்தது.

மலை பகுதிகளிலும் மழை பெய்து வருவதால், அணைகளுக்கான நீர் வரத்து இனி வரும் நாட்களில் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. நேற்று காலை நிலவரப்படி பேச்சிப்பாறை நீர் மட்டம் 13.45 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 282 கன அடி தண்ணீர் வந்தது.

அணையில் இருந்து 430 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. கடந்த ஆண்டு இதே நாளில் பேச்சிப்பாறை நீர் மட்டம் 41.23 அடியாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

பெருஞ்சாணி அணை நீர் மட்டம் 8.50 அடியாக உள்ளது. அணைக்கு வினாடிக்கு 20 கன அடி தண்ணீர் தான் வருகிறது. அணையில் இருந்து 10 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டு உள்ளது. கடந்த ஆண்டு இதே நாளில் அணையில் 72.32 அடி

தண்ணீர் இருந்தது. வறட்சி நிலவி வந்த நிலையில் இரவு முதல் பெய்த மழை காரணமாக விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இந்த மழை நீடித்து அணைகளில் தண்ணீர் பெருக்கெடுக்க வேண்டும் என அவர்கள் வேண்டி வருகிறார்கள்.

மழையை பொறுத்தவரை ஆனைக்கிடங்கு பகுதியில் அதிகபட்சமாக 39 மில்லி மீட்டரும், முள்ளங்கினாவிளையில் 37 மில்லி மீட்டரும் பெய்துள்ளது. மற்ற இடங்களில் பெய்துள்ள மழை அளவு (மி.மீ.) வருமாறு : பேச்சிப்பாறை 10.4, சிற்றார் 1 -1.6, சிற்றார்2 - 8.4, மாம்பழத்துறையாறு 30, இரணியல் 6.2, குளச்சல் 8.6, குருந்தன்கோடு 17.8, நாகர்கோவில் 13, பூதப்பாண்டி 2.5, கன்னிமார் 5.8, பாலமோர் 2.4. நாகர்கோவில் நகரில் பாதாள சாக்கடைக்காக சாலைகள் தோண்டப்பட்டு மூடப்படாமல் உள்ளன. இரவு பெய்த மழை காரணமாக சாலைகளில் வாகனங்கள் செல்ல முடியாமல் திணறின. பல சாலைகளில் தண்ணீர் தேங்கி, நடந்து செல்ல முடியாத நிலை இருந்தது.